## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர் – திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப.,

– – – – –

ந.க.எண்.16864/2023/ப2 நாள். 09.11.2024

பொருள்:- பணியாளர்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – ஈரோடு மாவட்டம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட தொகுதி IV-24.07.2022 – இளநிலை உதவியாளர் (Non Security) மற்றும் வரித்தண்டலர் (Security) – பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டவர்களை பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்தது – பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டது – இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறைபடுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :-
1. அரசாணை எண்.205 ஊரக வளர்ச்சித்துறை, நாள். 23.03.1989.
2. அரசாணை எண்.271, ஊரக வளர்ச்சித்துறை, நாள்.04.04.1990
3. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்.1881/PSD-B1/2023, நாள்.09.08.2023.
4. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண்.16864/2023/ப2, நாள்.08.09.2023
5. மேற்காணும் பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து வரபெற்ற பரிந்துரை கடிதங்கள்.

– – – –

ஆணை:-

பார்வை 3ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளர் அவர்களின் கடிதத்தின்படியும், ஈரோடு மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களில் ஈரோடு மாவட்ட பேரூராட்சி அலகில் பார்வை 4ல் காணும் ஆணையின்படி பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் கண்டுள்ள இளநிலை உதவியாளர்கள் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தனியர்கள் பணியேற்ற நாள் முதல் பணியினை வரன்முறைப்படுத்தி (Service Regularisation) ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்கள் பெயர் (திரு/திருமதி) | பதவியின் பெயர் | பணிபுரியும் பேரூராட்சி பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | எஸ்.கோமதி | இளநிலை உதவியாளர் | சிவகிரி | 21.09.2023 மு.ப. |
| 2. | கு.சௌந்தரபண்டியன் | இளநிலை உதவியாளர் | வெங்கம்பூர் | 25.09.2023மு.ப. |
| 3. | கா.வசந்த்குமார் | இளநிலை உதவியாளர் | பவானிசாகர் | 22.09.2023 மு.ப. |
| 4. | மா.ராஜகணபதி | இளநிலை உதவியாளர் | பவானிசாகர் | 22.09.2023 மு.ப. |
| 5. | இரா.இந்துப்பிரியா | இளநிலை உதவியாளர் | கூகலூர் | 21.09.2023 மு.ப. |
| 6. | ஆர்.தம்பிதுரை | இளநிலை உதவியாளர் | அந்தியூர் | 25.09.2023 மு.ப. |

மேற்காணும் இளநிலை உதவியாளர்கள் பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை சம்மந்தப்பட்ட தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதற்கான அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
ஈரோடு மாவட்டம்.

பெறுநர்

மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள
இளநிலை உதவியாளர்கள்– (சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல்அலுவலர்கள் மூலம்)

நகல் – 1. பேரூராட்சிகளின் இயக்குநர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், சென்னை 28.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை.
3. சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல்அலுவலர்கள் – உரிய நடவடிக்கைக்காக.
4. ப2 இருப்புக்கோப்பிற்கு.